## பயணிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

# மெட்ரோ ரெயிலில் தினமும் 1 லட்சம் பேர் பயணம்

சென்னை, ஜூலை. 10–

சென்னை மாநகர போக்குவரத்து நெருக்கடியை குறைப்பதற்காக மெட்ரோ ரெயில் திட்டம் உருவாக்கப்பட்டது. முதல் கட்டமாக 45 கி.மீட்டர் தூரத்துக்கு மெட்ரோ ரெயில் பாதை அமைக்கப்பட்டு பயணிகள் சேவை நடந்து வருகிறது.

தற்போது வண்ணாரப் பேட்டையில் இருந்து விமான நிலையம் வரை மெட்ரோ ரெயில் இயக்கப்பட்டு வரு கிறது. 2–வது கட்டமாக மாதவரம்–சிறுசேரி வரை மெட்ரோ ரெயில் பாதை அமைக்க திட்டமிடப்பட்டு பணிகள் நடந்து வருகிறது.

மெட்ரோ ரெயிலில் பயணம் செய்வோர் எண் ணிக்கை தற்போது அதிகரித் துள்ளது. மெட்ரோ ரெயிலில் சராசரியாக தினமும் 1 லட்சம் பேர் பயணம் செய்து வருகிறார்கள்.

இதுகுறித்து மெட்ரோ ரெயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

### தினமும் அதிகரிப்பு

மெட்ரோ ரெயில் பயணத்தை தினமும் அலுவலகம் செல்வோர் பெரிதும் விரும்புகிறார்கள். தனியார் நிறுவன ஊழியர்கள், ஐ.டி. நிறு வன ஊழியர்கள் என பல ஆயிரம் பேர் தினமும் பயணம் செய்து வருகிறார் கள்.

விமான பயணிகள் மற்றும் விமான நிலையத் துக்கு செல்வோருக்கு மெட்ரோ ரெயில் பெரிதும் உதவிகரமாக உள்ளது. விமான நிலையத்துக்கு தினமும் 9 ஆயிரம் பேர் மெட்ரோ ரெயில் மூலம் வந்து செல்கிறார்கள். சென்ட்ரல் மெட்ரோ ரெயில் நிலையத்துக்கு தினமும் 8,500 பேர் வந்து செல்கிறார்கள். திருமங்கலம் ரெயில் நிலையத்துக்கு 7500 பேர் தினமும் வந்து செல் கிறார்கள்.

### சனி–ஞாயிறு

வார வேலை நாட்களில் தினமும் அனைத்து ரெயில் நிலையங்களிலும் சராசரியாக 95 ஆயிரம் பேர் பயணம் செய்கிறார்கள். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை களில் 60 ஆயிரம் பேர் சரா சரியாக பயணம் செய்து வருகிறார்கள்.

ஜூன் மாதம் இறுதியில் சராசரியாக 1 லட்சம் பேர் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்து உள்ளனர். திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை 1,10,000 இருந்து 1,12,000 பேர் வரை பயணம் செய்து இருக்கிறார்கள். மெட்ரோ ரெயில் மூலம் அலுவலகம் செல்வோர் எண்ணிக்கை பெருமளவு கூடி உள்ளது.

இவ்வாறு அவர் கூறி னார்.